## ஜெபக் குறிப்புகள்

1. குடும்பங்கள் மேல் திரளாக தீவினைகள் பின் தொடராதபடிக்கு நம்முடைய குடும்பங்கள் காக்கப்படவும், நம் குடும்பத்தாருக்கு கர்த்தர் தக்க பாதுகாப்புத் தந்து அவர்களை காத்துக் கொள்ளும்படியாகவும் ஜெபியுங்கள்.

2. குடும்பங்களின் சீரைக் குலைக்கும்படி கிரியை செய்ய எழும்பியிருக்கும் எல்லாப் பொல்லாத ஆவிகளின் கிரியைகளும் கட்டப்பட ஜெபியுங்கள்.

3. குடும்பங்களில் சீர்குலைவுகள் ஏற்படுவதின் காரணமாக தலைமுறைகள் பாதிக்கப்பட்டு, அதின் காரணமாக தேசத்தில் பொல்லாத, கொடிய சந்ததியினர் எழும்பி விடாதபடிக்கு கர்த்தர் காக்கும்படியாக ஜெபியுங்கள்.

4. குடும்பங்கள் சிதைந்து போகக் காரணமாக எந்த பொல்லாத ஊழியரும் கிரியை செய்து விடாதபடிக்கு கர்த்தர் குடும்பங்களைக் காக்கும்படியாகவும், குடும்பங்களில் பிரிவினைகளை ஏற்படுத்துகிற எவரையும் கர்த்தர் தடை செய்யும்படியாகவும் ஜெபியுங்கள்.

## தொடர்ந்து ஜெபிக்க விரும்புகிறீர்களா?

தொடர்ந்து இதுபோன்ற தீர்க்கதரிசனங்களுக்கு ஜெபிக்க விரும்புகிறீர்களா? அப்படியானால் கீழ்க்கண்ட எங்கள் தொடர்பு எண்களில் ஏதாவது ஒன்றிற்கு மிஸ்டு கால் கொடுங்கள். எங்கள் ஊழியர்கள் உங்களுடன் தொடர்பு கொண்டு தொடர்ச்சியாக நீங்கள் ஜெபத்திற்கான தீர்க்கதரிசனங்களை எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள உங்களுக்கு உதவி செய்வார்கள்.


**prophetic propagators mission**

| MADURAI | CHENNAI | BANGALORE |
| --- | --- | --- |
| 9488987770 | 9600001844 | 8095772333 |

Email : propagators@vojmedia.com


0091/TAM/2019/001



கர்த்தர் உரைத்த வார்த்தைகள்

# குடும்பங்களுக்காக..

### குடும்பங்களைக் குறித்துக் கர்த்தர் உரைத்த வார்த்தைகள்:

நாம் வாழும் இந்தக் கடைசிக்காலத்தில் குடும்பங்களில் ஏற்படப் போகும் சில தீமையான காரியங்களைக் கர்த்தர் நமக்கு முன்னறிவிப்பாக எச்சரித்துச் சொல்லி, அவைகளுக்காக நாம் ஜெபிப்பதின் மூலம் நம்முடைய குடும்பங்களையும், நம்மைச் சுற்றியுள்ள மற்றவர்களின் குடும்பங்களையும் பாதுகாத்துக் கொள்ள ஆலோசனை தந்திருக்கிறார். இந்தக் கைப்பிரதியில் கர்த்தர் குடும்பங்கள் பற்றி வெளிப்படுத்திச் சொன்ன எச்சரிக்கையின் வார்த்தைகள் அடங்கியிருக்கிறது. நிதானமாக வாசித்தறிந்து இவைகளுக்காக ஜெபியுங்கள்.

அன்புடன்,

**சகோ.வின்சென்ட் செல்வகுமார்**

இந்த தீர்க்கதரிசன வார்த்தைகள் 02.01.2019 அன்று பெங்களூரில் நடைபெற்ற புத்தாண்டு வாக்குத்தத்தக் கூட்டத்தில் கர்த்தர் வெளிப்படுத்திப் பேசியது.

## கர்த்தர் உரைத்த தீர்க்கதரிசன வார்த்தைகள்

இதோ, தேசத்தில் குடும்பங்களின் மேல் தீவினைகள் திரளாகப் பின்தொடரும். குடும்பங்களுக்கு விரோதமாகக் கிரியை செய்து, தேசத்தின் சீரைக் குலைக்கவும், விபச்சார சந்ததியையும், உங்கள் தெருக்களில் சுற்றித் திரியும் கொடிய சந்ததியையும் எழுப்பவும், மாம்சத்தை வேட்டையாடி அதின் ரத்தத்தை வீதிகளில் சிந்தப் பண்ணும் பொல்லாதவர்களையும், பணத்திற்காக கொலை செய்கிற மனிதாபிமானமற்ற சந்ததியை திரளாய் ஏற்படுத்தவும், வேசிப் பிள்ளைகளையும், தீமையை விலை பேசுகிற கொடிய தலைமுறையையும் எழுப்பவும் தேசத்தின் நடுவில் கிரியை செய்யும் பொல்லாத ஆவிகளின் கிரியைகள் கட்டவிழ்த்து விடப்படும்.

அது தேவனை மறந்த குடும்பங்களின் மேலும், தீமையைப் புசிக்கிற குடும்பங்களின் மேலும், என் நாமத்தைக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லி என்னை விட்டு விலகிப் போகிறவர்களின் குடும்பங்களின் மேலும், அநீதியானதை நடப்பித்து அதின் பலனால் தன்னைப் பெருக்கிக் கொள்ளுகிறவர்களின் குடும்பங்களின் மேலும் தீவிரமாகக் கிரியை செய்யும். அதினால், திரளான திருமண முறிவுகள் உண்டாகும். அதின் தொகை தேசத்தில் திரளாகப் பெருகும். குடும்பங்களுக்குள் புகுந்து அதின் சீரைக் கெடுக்கும் ஆவிகள் தீவிரமாகக் கிரியை செய்கிறதினால் கள்ள உறவுக்காரர்களும், முறையற்ற பாலியல் வன்முறையாளர்களும் குடும்பங்களில் எழும்புவார்கள். இதினால் தன் புருஷனைக் கொல்லுகிற ஸ்திரீயும், தன் மனைவியை கொலை செய்கிற புருஷரும் திரளாய் எழும்புகிறதைக் கேள்விப்படுவீர்கள்.

அப்படியே, பிள்ளைகளைக் கெடுக்கிற பெற்றோரும், குழந்தைகளைக் கெடுக்கிற முதியோரும் பெருகுவார்கள். களியாட்டங்களுக்கு விலைபோகிற குடும்பங்களும், மாம்ச வெறியினால் சிதறிப் போகிற குடும்பங்களும் திரளாக எழும்புகிறதைப் பார்ப்பீர்கள். சபையானது தன் உத்திரவாதத்தை மறந்து தீமைக்கும், களியாட்டங்களுக்கும், கள்ள வார்த்தைகளுக்கும், பொருளாசைக்கும் தன்னை விற்றுப் போட்டதினால், இவைகளைச் சார்ந்திருக்கிற குடும்பங்கள் அநேகத்தின் மேல் இந்த தீமையானது அதிகாரம் கொள்ளும்.

புத்தியற்ற மேய்ப்பனையும், கள்ளப் போதகனையும் பின்பற்றுகிற குடும்பங்களின் அலங்கங்கள் பலவீனமாயும் அதின் கதவுகள் சிதிலமடைந்ததாயும் இருக்கிறதினால் தீமையானது இவர்களைத் தீவிரமாய் பிடித்துக் கொள்ளும். இவர்களுக்காகப் பரிந்து பேசுகிறவர்களும், இவர்களைத் தப்புவிக்கும்படி என் வார்த்தைகளினால் ஆலோசனை சொல்லுகிறவர்களும் இல்லாதபடியினால் தேசத்தின் குடும்பங்களின் மேல் வருகிற இந்த தீமை, என் ஜனங்களிடத்திலும் தீவிரமாக் கிரியை செய்யும். மகனும்,தகப்பனும், தாயும் மகளும் கூடிக் கொண்டு தங்கள் இச்சைக்காக வேட்டையாடுகிறதையும், சகோதரிகள் கூடிக் கொண்டு சகோதரனையும், சகோதரர்கள் கூடிக் கொண்டு சகோதரிகளையும் சீரழிக்கும் கொடுமைகள் அநேகம் குடும்பங்களில் பெருகுவதைக் காண்பீர்கள்.

அன்றியும், இலச்சையான புணர்ச்சிக்காரரும், கொடுமையான புணர்ச்சிக்காரரும் குடும்பங்களில் திரளாக எழும்புவார்கள். தன் குடும்பம் காக்கப்படும்படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறவனும், தன் சுவர்கள் இடிந்து விடாதபடிக்கு என்னிடத்தில் ஒத்தாசை தேடுகிறவனும் பாக்கியவான். அவனைத் தீமை தொடுகிறதில்லை. நீதியினால் தன்னை நிலைநிறுத்தி, அநீதத்தின் கூலியினால் தன்னைத் தீட்டுப்படுத்தாதபடிக்கு தன்னைக் காத்துக் கொள்ளுகிறவன் பாக்கியவான். அவன் வீட்டாரைத் தீமை தொடுவதில்லை. கள்ளர்களைப் பின்தொடராமலும், என் நாமத்தை வீணிலே வழங்குகிற பொல்லாத மேய்ப்பனைப் பின்பற்றாமலும், என் ஆவியைக் களியாட்டுக்காகவும், என் வசனத்தை தன் பிழைப்புக்காகவும் பயன்படுத்துகிற பொல்லாதவனைப் பின்பற்றாமலும் தன் ஜீவனைக் காத்துக் கொள்ள கவனமாயிருக்கிறவன் பாக்கியவான். நான் அவனுக்குத் துணையாகவும், என் தூதர்கள் அவனுக்குக் காவலாயும் இருப்பார்கள். அப்பொழுது அவன் பிள்ளைகள் காக்கப்பட்டு, அவன் அஸ்திபாரங்கள் உறுதிப்படுத்தப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.